## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண். 6/2019

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சதாசிவம் | மதம் | : இந்து |
| த/பெ | : பெருமாள் | ஜாதி | : -- |
| வயது | : 53 | கிராமம் | : செருக்கனூர் |
| தொழில் | : கூலி | வட்டம் | : திருத்தணி |

**29.11.2024**

**வா.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

6. என்னுடைய பிரமாண வாக்குமூலம் பத்தி 3 ல் 2009 ல் தீ விபத்து ஏற்பட்ட போது உறவினர்கள் வீட்டில் தங்கியுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எந்த ஊரில் யாருடைய வீட்டில் தங்கியுள்ளேன் என்பதை விவரமாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது பொய் என்றாலும் நான் வெளியூரில் தங்கவில்லை என்றாலும் அதே ஊரில் உள்ள வேறொரு வீட்டில்தான் இருந்து வருகிறேன் என்றாலும் எனக்கு வேறு வீடே கிடையாது. வழக்கு சொத்தில் ரௌடிகளுடன் வந்து சண்டைபோட்டதாக சொல்லியிருப்பதில் அதை குறித்து நான் காவல் துறையில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன்.

7. அந்த புகாருக்கு ஆதரவாக மனு ரசீதோ புகார் மனு நகலோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 2 வட்டாட்சியர் நடவடிக்கையில் புல எண்ணோ, வீட்டு எண்ணோ குறிப்பிடப்படவில்லை என்றால் எனக்கு எழுதப்படிக்க தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 7 வட்டாட்சியர் உத்தரவிலும் புல எண்ணோ, வீட்டு எண்ணோ குறிப்பிடப்படவில்லை என்றால் எனக்கு எழுதப்படிக்க தெரியாது.

8. தீ விபத்திற்கு பின்பு 2015 ல் வா.சா.ஆ 3ன்படி வட்டாட்சியர் பட்டா கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ 3 பட்டா எனக்கு எந்த அடிப்படையில்

கொடுக்கப்பட்டது என்றால் என்னிடம் ஏற்கனவே இருந்த பட்டா எரிந்து போனதால் இந்த பட்டா கொடுத்தார்கள். இழப்பீடுக்கு உத்தரவிட்டதுபோல் பட்டா வழங்க எனக்கு உத்தரவிடப்பட்டதா என்றால் மொத்தமாக எரிந்துபோனதால் அவர்களாகவே ஆவணங்கள் எனக்கு கொடுத்தார்கள். 2015 ல் பட்டா கொடுக்குமாறு நான் தனியாக மனு தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகமில்லை.

9. வழக்கு சொத்தை 2015 ல் மஹிந்திரா நிதி நிறுவனத்தில் நான் அடமானம் வைத்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இதை பொருத்து நான் வா.சா.ஆ 5 வில்லங்க சான்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ 5 வில்லங்க சான்றிதழில் வடக்கே ராபின் வீடு, தெற்கே ஆறுமுகம் வீடு, மேற்கே சந்தோஷம் வீடு, கிழக்கே தெரு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் இதற்கு முன்பு எனது சாட்சியத்தில் குறுக்கு விசாரணையில் மேற்கே தங்கவேல், கிழக்கே தெரு, வடக்கே ராஜ், தெற்கே கஜேந்திரன் என கூறியுள்ளதில் எது சரியான நான்கு எல்லை என்றால் மேற்கே தங்கவேல், கிழக்கே தெரு, வடக்கே ராஜ், தெற்கே கஜேந்திரன் சரியான நான்குமால் ஆகும்.

10. வழக்கு சொத்தைதான் நான் அடமானம் செய்ததாக சொல்கிறேன் என்றால் சரிதான். அடமான ஆவணத்தில் உள்ள நான்குமால் வேறு என்றாலும் நான் தற்போது சொல்லும் நான்குமால் வேறு என்றாலும் இல்லை. இரண்டும் வெவ்வேறு சொத்து என்றால் இல்லை. ஒரே சொத்துதான். நான் வழக்கு சொத்தை அடமானம் செய்யவில்லை என்றாலும் அதே ஊரில் உள்ள வேறு சொத்தை அடமானம் செய்துள்ளேன் என்றாலும் இல்லை. வா.சா.ஆ 4 வீட்டு வரி ரசீதுகளில் கதவு எண்.256/2, 2/2, 2/293 என மூன்று விதமான வீட்டு எண்கள் உள்ளது என்றாலும் அதே ஊரில் உள்ள வேறு வீட்டிற்குதான் அடமானம் செய்துள்ளேன் என்றாலும் இல்லை. எனக்கு அந்த ஊரில் ஒரே வீடுதான் உள்ளது. 30 வருடமாக நான் ஒரே இடத்தில்தான் உள்ளேன்.

11. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் நான் 30 வருடமாக நான் ஒரே இடத்தில் இருக்கிறேன். நான் 30 வருடமான ஒரே வீட்டில் இருந்திருந்தால் ஒரே கதவு எண்ணிற்கு வீட்டு வரி ரசீது தாக்கல் செய்திருப்பேன் என்றால் ஒரே வீட்டில்தான் இருக்கிறேன். வா.சா.ஆ 3 பட்டாவில் ந.க.எண்.2058/80/அ1 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு எழுதப்படிக்க தெரியாது. 2015 ல் பட்டா

கொடுத்திருந்தால் ந.க.எண்.2058/80/அ1 என 1980ம் வருடத்தை காண்பித்து இருக்கமாட்டார்கள் என்றாலும் நான் மோசடியாக தயார் செய்துள்ளேன் என்றாலும் நான் மோசடியாக தயார் செய்யவில்லை.

12. எனக்கு 2015ல் பட்டா கொடுத்திருந்தால் ந.க.எண். 2015ஐ குறிப்பிட்டு இருப்பார்கள் என்றாலும் நானாக தயார் செய்தது என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டது என்றாலும் நான் போலியாக ஆவணம் தயார் செய்து வழக்கு சொத்தை அபகரிக்க முயற்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. என் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)